# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, தாய்லாந்து-இலங்கை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, ஒற்றோபர் மாதம் 12 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, தாய்லாந்து – இலங்கை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்டி) 3/2006

## தாய்லாந்து – இலங்கை பௌத்த கலாசார நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"தாய்லாந்து – இலங்கை பௌத்த கலாசார நிலையம்" என்று அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று சொல்லப்பட்ட சங்கத்திற்குரிய சகல கருமங்களையும் பயனுள்ள முறையில் நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதுவரை காலம் ஹெய்யந்துடுவை, மாபிமையில் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எந்நோக்கங்கள் மற்றும் விடயங்களுக்காக நிறுவப்பட்டதோ அந்நோக்கங்கள் மற்றும் விடயங்கள் இதுவரை காலம் அச்சங்கத்தினால் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டும் நிறைவேற்றப்பட்டும் உள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கத்தைக் கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்களின் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, தாய்லாந்து– இலங்கை பௌத்த கலாசார நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாய்லாந்து – இலங்கை பௌத்த கலாசார நிலையத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் கூட்டிணைக்கப்படும் தாபனத்தில் இனி உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான ஆட்கள் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாய்லாந்து – இலங்கை பௌத்த கலாசார நிலையம் என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக் தாய்லாந்து – இலங்கை பௌத்த கலாசார நிலையத்தைக் கூட்டிணைத்தல்.

கப்பட்ட குழுவாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்க வும், பயன்படுத்தவும் அது அதனை விரும்பியாங்கு மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் நோக்கங்கள்.

3. கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களாவன :—

(அ) இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையே சமய மற்றும் கலாசார தொடர்பை மேம்படுத்துதலும் பேணுதலும்;

(ஆ) பௌத்தம் பற்றியுள்ள அக்கறையை மேம்படுத்தல் ;

(இ) தேரவாத பௌத்த தர்மத்தையும் வாழ்க்கைத் தத்து வத்தையும் பேணுதல் ;

(ஈ) பௌத்தத்தைப் படிப்பதற்கும் பேணுவதற்குமான வசதிகளை வழங்குதல் ;

(உ) பௌத்தத்தை நடைமுறையில் உபயோகித்தலை ஊக்கப்படுத்தல் ;

(ஊ) தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பௌத்தர்களுக்கும் பௌத்த அமைப்புகளுக்கும் இடையே ஐக்கியத்தையும் ஒத்துழைப்பையும் வளர்த்தல் ;

(எ) பௌத்தர்களின் பண்பாட்டு, கலாசாரம், பொருளா தாரம் மற்றும் சமூக சேமநலத்தை வளர்த்தல் ;

(ஏ) தேவையிலுள்ள பௌத்தர்களுக்கு சேமநல வசதிகளை வழங்குதல் ;

(ஐ) சமூகத்தின் பௌத்தர்களுக்கு கல்வி மற்றும் தொழில் வசதிகளை வழங்குதல் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு ஒத்த நோக்கங் களைக் கொண்ட ஏனைய சங்கங்கள், சபைகள் மற்றும் அமைப்புகளோடு ஒத்துழைப்புடன் செயற்படல்.

**4.** இச்சட்டத்தின் அல்லது வேறு எந்தவொரு எழுத்துமூல சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக :—

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.*

(அ) வங்கி கணக்குகளை ஆரம்பித்தல், நடத்துதல் மற்றும் மூடிவிடுதல் ;

(ஆ) பிணை உறுதியுடன் அல்லது இல்லாமல் பணத்தைக் கடனுக்கு பெறுதலும், திரட்டலும் ;

(இ) மானியங்களையும் நன்கொடைகளையும் பெற்றுக் கொள்ளலும் திரட்டலும் ;

(ஈ) மேலதிக நிதியினை முதலீடு செய்தல் ;

(உ) தேவையான அதிகாரிகளையும், ஊழியர்களையும் சேவையில் ஈடுபடுத்தல், சேர்த்துக் கொள்ளல் மற்றும் சேவையில் இருந்து நீக்குதல்,

உட்பட கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை அல்லது அந்நோக்கங்களில் ஏதேனுமொரு நோக்கத்தைப் பரப்புதல் அல்லது மேம்படுத்துதலுக்காக அவசியமான அல்லது உகந்த எந்த வகையிலானதேனும் சகல நடவடிக்கைகளையும் விடயங்களையும் கருமங்களையும் செய்ய, கொண்டுநடாத்த மற்றும் நிறைவேற்ற தத்துவமுடையதாதல் வேண்டும்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் பணிகள் பிரதம காப்பாளர், தலைவர் மற்றும் கூட்டுத்தாபன விதிகளின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்படும் எழு பேருக்கு மேற்படாத ஐந்து பேருக்கு குறையாத மேலும் சில உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுக்குழுவினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கும் அமைய மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பணிகளை முகாமைத்துவப் படுத்தல்.*

(2) அதிவணக்கத்திற்குரிய ப்ஹர தம்மபரியத்திவேதி மகா நாயக்க தேரர் தாபனத்தின் ஆயுட்கால காப்பாளராதல் வேண்டும்.

(3) அவ் அதிவணக்கத்திற்குரிய ப்ஹர தம்மபரியத்திவேதி மகா நாயக்க தேரர் காலஞ்சென்றதன் அல்லது விலகியதன் பின்னர் தலைவரின் சிபார்சின் பேரில் தகைமையுள்ள மற்றும் பொருத்தமான ஒருவர் பிரதம காப்பாளராக நிறைவேற்றுக் குழுவினால் நியமிக்கப்படல் வேண்டும்.

(4) வணக்கத்திற்குரிய ராஸ்ஸகல சீவலீ தேரர் தாபனத்தின் ஆயுட்கால தலைவராக வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து விலகும்வரையும் அத்துடன் பதவி வெற்றிடமாகும் வரையும் அல்லது பதவி விலகினாலொழிய அத்துடன் பதவி வெற்றிடமானாலொழிய அத்தகைய பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(5) இச்சட்டம் அமுலுக்கு வரும் நாளில் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினர்கள் முதலாவது நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும்.

*நிறைவேற்றுக் குழுவில் அங்கத்துவரல்லாதவர் ஆவதற்கான தகைமையீனங்கள்.*

**6.** (அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் அல்லாதிருந்தால்;

(ஆ) பௌத்தரல்லாதவராகவிருந்தால் ;

(இ) வங்குரோத்து அல்லது கடனிறுக்க வகையற்றவர் என நீதி மன்றத்தால் கண்டறியப்பட்ட ஆளாகவிருந்தால் ;

(ஈ) மன ஆரோக்கியம் குறைந்தவரானால் ;

(உ) துர்நடத்தையில் ஈடுபட்டார் என முறையான நீதிமன்றமொன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டவரானால்,

அவ்வெந்த ஆளும் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படலாகாது.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7.** (1) உரிய விடயத்திற்காக கூட்டப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பொதுச்சபைக் கூட்டமொன்றின்போது சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாதவர்களின் அங்கீகாரத்தோடு கீழ்க்காணும் நடவடிக்கைகளுக்காக இந்தச் சட்டத்தின் அல்லது ஏனைய எழுத்திலான சட்டஏற்பாடுகளுக்கு முரணாகாத விதிகளை இயற்றுதல் சட்டபூர்வமானதாதல் வேண்டும்:–

(அ) கூட்டுத்தாபனத்தில் உறுப்பினர்களைச் சேர்த்தல், கூட்டுத்தாபனத்தில் இருந்து விலகுதல் மற்றும் நீக்குதல் ;

(ஆ) நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்கள் வகிக்கக் கூடிய பதவிகள் மற்றும் அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக்குழுவினதும் ஏனைய பல்வேறு அதிகாரிகளினதும் பிரதிநிதிகளினதும் ஊழியர்களினதும் பணிகளும் கடமைகளும் ;

(ஈ) கூட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள்,

மற்றும் கூட்டுத்தாபனத்தின் பணிகளை நிர்வகித்தல்.

(2) ஓராம் உட்பிரிவின் விதிகளை ஆக்குவதைப் போலவே அவற்றில் ஏதாவது சேர்த்தல், திருத்தல் அல்லது ரத்துச் செய்தலை மேற்கொள்ளலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் சகல உறுப்பினர்களும் தற்காலத்தில் அமுலில் உள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்குக் கீழ்ப்பட்டோராதல் வேண்டும்.

*நிலையத்தின் கிடைக்க வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கடன்கள்.*

**8.** இச்சட்டம் அமுலுக்கு வரும் நாளில் நிலையத்தின் சகல கடன்களும் பற்றுக் கணக்குகளும் இத்தால் கூட்டிணைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அந்நாளில் நிலையத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய சகல கடன்களும் செலுத்தப்பட வேண்டிய சந்தா மற்றும் பங்களிப்புத் தொகையும் இச்சட்டத்தின் நடவடிக்கைகளுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், கொடை, மரணசாதன அளிப்பு, நன்கொடை, அறுதி, உதவுதொகை அல்லது கட்டணங்கள் என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கக்கூடியவாறான ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கி அல்லது வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை மறுசீரமைக்கும், அபிவிருத்தி செய்யும் அத்துடன் மேம்படுத்தும், நோக்கத்துக்காக கூட்டுத்தாபனமானது ஏதேனும் தேய்மான நிதியத்தை, ஒதுக்கை அல்லது கடனாழ் நிதியத்தைத் தாபிக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட செலவினங்கள் யாவும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்காய்வும் கணக்குகளும்.

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்தி ருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவின் தகைமைபெற்ற "கணக்காய்வாளர்" என்பது–

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்ட வராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

**11.** கொள்வனவின் மூலம், கையளித்தல் மூலம். நன்கொடை மூலம், உயில் மூலம் அல்லது வேறு ஏதாவது ஒரு முறையில் தாபனத்திற்கு உரித்தாகும் அசையும் மற்றும் அசையா சொத்தைப் பொறுப்பேற்கவும் வைத்திருக்கவும் தற்காலத்தில் அமுலில் உள்ள விதிகளின்கீழ் அச்சொத்தை விற்கவும், அடகு வைக்கவும், குத்தகைக்கு விடவும் பரிமாற்றம் செய்யவும் அல்லது வேறொரு வகையில் நீக்கிவிட தாபனத்திற்கு முடியும். அதேபோல் இச்சட்டம் அமுலுக்கு வரும் நாளில் நிலையத்திற்கு உரித்தாகவிருந்த சகல சொத்துக்களும் தாபனத்தின் சொத்துக்களாகிவிடும்.

*தாபனம் சொத்துக்களை வைத்திருக்க முடியும்.*

**12.** தலைவர் மற்றும் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவர் முன்னிலையிலன்றி கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வித பத்திராதியிலும் வைக்கப்படக்கூடாது. அத்தோடு தாம் சமுகமளித்து இருந்ததற்கான ஆதாரமாக அவர்கள் அப்பத்திராதிகளில் கையொப்பமிடவேண்டும். அத்தோடு அக்கையொப்பமிடுதல் ஒரு நபர் சாட்சியாக கையொப்பமிடுதலிலிருந்து சுயாதீனமானதாக இருக்க வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதனது எல்லாக் கடன்களையும், பொறுப்புகளையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. அத்தகைய ஆதனங்கள், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகளால் தடை செய்யப்பட்டுள்ளதோ அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படலாம் அல்லது கைமாற்றப்படலாம். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்களை கூட்டுத்தாபனத்தின் கலைப்பின்போது அல்லது கலைப்புக்கு உடன்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கலைப்பின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**14.** இச்சட்டத்தில் அட்டங்கியுள்ளதெதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது வேறு எவரேனும் ஆட்களினது உரிமைளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்குதல்.

**15.** இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படின் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்